விலை ரூபா 4-50

# முரசொலி

முரசு 05 ஒலி 65 பிரமோதூத தை 18 (31-01-1991) வியாழன்


● இந்திய வெளியுறவு அமைச்சர் சுக்ளா ஜனாதிபதியிடம் தெரிவித்தார்

## யுத்த நிறுத்தம் கைவிடப்பட்டமை ஏமாற்றமே

கொழும்பு வந்துள்ள இந்திய வெளியுறவு அமைச்சர் வி. சி. சுக்ளா இரண்டாம் நாளான நேற்று ஜனாதிபதி பிரேமதாஸவை சந்தித்து ஒன்றரைமணிநேரம் பேச்சு நடாத்தினார். பேச்சுக்களின் விவரம் குறித்து பின்னர் கருத்து வெளியிட்ட ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன், அமைச்சர் சுக்ளா இலங்கையின் ஒருமைப்பாட்டை இந்தியா வரவேற்பதாக ஜனாதிபதியிடம் உறுதி அளித்தாகவும் மாகாணசபைகளுக்கு அதிகாரம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்டதாகவும் கூறினார். இந்தியப்படைகள் எதிர்காலத்தில் இங்குவருவது சாத்தியமில்லை எனவும் விடுதலைப்புலிகளுடன் அரசியல் தீர்விற்கான பேச்சுகளை ஆரம்பிப்பதே பிரச்சினைக்குச் சரியான தீர்வு என எடுத்துக்கூறியதாகவும் குறிப்பிட்டார். இதனிடையே நேற்றைய பேச்சுகள் குறித்துக் கருத்துவெளியிட்ட இந்தியவெளியுறவுச் செயலர் முஜ்கந்டுபே இலங்கை —04ஆம் பக்கம் பார்க்க

# மணலாற்றில் உக்கிரமோதல்

# 5 சிப்பாய்கள் பலி!

## ஒரு விசைப்படகு சேதம்; ஆயுதங்கள் மீட்பு

மணலாறு மாவட்டத்தில் நேற்று முன்தினம் இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் கடும் மோதல்கள் இடம்பெற்றன. ஐந்து இராணுவத்தினர் பலியாகினர். இவர்களிடமிருந்து புலிகளால் ஆயுதங்கள் மீட்கப்பட்டன. இச் சம்பவத்தைத் தொடர்ந்து அப்பகுதியில் பரவலான கடும் குண்டு வீச்சு நடந்து வருகிறது.

காலை 10.30 மணியளவில் [illegible] இராணுவ முகாமில் இருந்து இராணுவத்தினர் கவசவாகனங்கள் சகிதம் சாம்மன் குளம் முகாமிற்கு சென்றனர். முகாமிலிருந்து ஐந்நூறு யார் தொலைவில் வைத்து புலிகள் இவர்கள் மீது கடும் தாக்குதலை ஆரம்பித்தனர். இதனால் 5 சிப்பாய்கள் ஸ்தலத்திலேயே பலியானார்கள்.

இதைத் தொடர்ந்து மேலும் ஒரு தொகுதி இராணுவத்தினர் கவசவாகனங்கள் சகிதம் முகாமில் இருந்து வந்து விடுதலைப் புலிகளு ...04 ஆம் பக்கம் பார்க்க

## ஒப்பந்த அமுலாக்கலில் கருத்து வேறுபாடு நிலவுகிறது

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை முழுமையாக அமுல்படுத்துவது தொடர்பாக இலங்கை-இந்தியத் தரப்பில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளதாகப் பி. பி. ஸி. நேற்றிரவு தெரிவித்தது.

அமைச்சர் சுக்ளா ஜனாதிபதி பிரேமதாஸவுடன் பேச்சு நடாத்தியபோது ஒப்பந்தம் குறித்தும் பேசப்பட்டது. அப்போதே இக் கருத்து வேறுபாடுகள் நிலவியதாகத் தெரிவிக்கப்பட்டது.

## சாவகச்சேரி, ஆனையிறவில் பொம்மர்கள் குண்டு வீச்சு

நேற்றுக் காலை 10.30 மணியளவில் இரண்டு பொம்மர்கள் சாவகச்சேரியின் கல் [illegible] பகுதியில் குண்டு வீச்சுத் தாக்குதலை நடாத்தின.

இத்தாக்குதலில் இப் பகுதியில் உள்ள இரண்டு வீடுகள் சேதமடைந்ததுடன் பல தென்னை மரங்கள் முறிந்தன.

மேலும் ஒரு குண்டு வெடிக்காத நிலையில் ஊன்று ஒன்றினுள் விழுந்து தண்ணீரினுள் மூழ்கியுள்ளது.

இதேபோல ஆனையிறவிலும் தாக்குதல்கள் நடாத்தப்பட்டன. (ப 32, ப 4)

### ஹெலி சூடு

நேற்றுக்காலை 8.30மணிக்கு வல்லை வெளியில் வைத்து மினிபஸ் மீது ஹெலிக் கொப் ...04 ஆம் பக்கம் பார்க்க

## முல்லை. குண்டு வீச்சு பலர் பலி; 50 பேர் காயம்

நேற்று மாலை 4.30 மணியளவில் முல்லைத்தீவு சந்தை மற்றும் சி. சி. பாடசாலை, கிராமசபை ஆகியவற்றின் மீது 3 பொம்மர்கள் திடீரெனத் தாக்குதல் நடாத்தின.

தாக்குதலில் ஐம்பதுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் காயமடைந்தனர். இருபதுக்கும் அதிகமானோர் பலியாகியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

காயமடைந்தவர்களில் ஏழு பேர் யாழ்ப்பாணம் கொண்டு வரப்பட்டனர் இவர்களில் கலைச்செல்வன் (18) பின்னர் மரணமானார். (ப-14)

## ஆண்கள் சிகிச்சைபெற வவுனியாவில் படையினர் தடை

நோயினால் அவஸ்தைப்படும் ஆண்களை வவுனியா வைத்தியசாலைக்கு சென்று சிகிச்சை பெறுவதற்கு இராணுவம் அனுமதி மறுத்து வருகிறது. இதனால் ஓமந்தை, நொச்சிமோட்டை, தாண்டிக்குளம் பகுதி ஆண்கள் பலர் நோயினால் அவதைப்படுவதாக அங்கிருந்து வருவோர் தெரிவித்தனர். (38)

## வவுனியாவில் இருந்து யாழ்நோக்கி 100 லொறிகள் புறப்பட்டன

வவுனியாவில் தடுத்து வைக்கப்பட்ட சுமார் நூறு லொறிகளை யாழ்ப்பாணம் செல்ல படையினர் அனுமதியளித்தனர்.

இதனையடுத்து இருபத்தைந்து லொறிகள் பூநகரிக்கு நேற்று வந்து சேர்ந்தன.

இவற்றில் அரிசி, மா, சீனி மண்ணெண்ணெய், தேங்காய் எண்ணெய், பாடசாலை உபகரணங்கள் மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் கொண்டு வரப்பட்டுள்ளதாக வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

இதனையடுத்து யாழ்ப்பாணப் பகுதியில் பொருள்களின் ...04 ஆம் பக்கம் பார்க்க

## அமைச்சர் சுக்ளாவுக்கு கொழும்பில் பல விருந்துகள்

கொழும்பு வந்துள்ள இந்திய வெளியுறவு அமைச்சர் சுக்ளா கொழும்பில் பல இராப்போசன விருந்துகளில் கலந்துகொண்டு வருகிறார். கடந்த இரண்டு நாட்களில் இவர் இரண்டு இராப்போசன விருந்துகள் உட்பட நான்கு வைபவங்களில் கலந்துகொண்டிருக்கின்றார். வெளிநாட்டமைச்சர் ஹரல்ட் ஹேரத், ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீத், அமைச் —04 ஆம் பக்கம் பார்க்க

# தமிழக அரசு கலைப்பு!

# ஜனாதிபதி ஆட்சி அமுல்

தமிழ்நாட்டில் முதலமைச்சர் மு. கருணாநிதியின் தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டு விட்டது. நேற்றிரவு முதல் தமிழ்நாட்டில் ஜனாதிபதி ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டில் இலங்கைப் போராளிகள் நடமாட்டத்தினால் அங்கு சட்டம் ஒழுங்கு குலைந்து விட்டதினாலேயே இந்நடவடிக்கை என ஜனாதிபதி அலுவலகம் அறிவித்தது.

15 வருடங்களின் முன்னர் 1976இலும் ஜனவரி 31இல் தான் கருணாநிதியின் ஆட்சி ஒரு முறை கலைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.



## கொழும்பில் சுக்ளா - ரஞ்சன் 'பிஸ்னஸ்' பற்றிப் பேச்சு

தற்போது ஸ்ரீலங்காவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. வி. ஸி. சுக்ளா இரு நாடுகளுக்கும் இடையிலான தேயிலை ஏற்றுமதி பற்றியும் அதிமுக்கியத்துவமளித்து ஆராய்ந்ததாக நேற்றுப் புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன.

இரு நாடுகளுக்கும் இடையில் தேயிலை விஷயத்தில் எட்டப்பட்டிருக்கும் உத்தேச —04 ஆம் பக்கம் பார்க்க

## தமிழகத்தில் பதற்றம் பரா ராணுவம் விரைகிறது!

தமிழக ஆட்சி கலைப்புக் குறித்த செய்தியை அடுத்து சென்னையிலும் அதன்சுற்றுப்புறங்களிலும் பதற்றம் நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டது. பரா இராணுவத்தின் 14பிரிவுகள் தமிழகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன.

## சாவகச்சேரி நவம் கனடாவில் காலமானார்

முன்னாள் சாவகச்சேரி எம். பி. வி. என். நவரட்ணம் கனடாவின் ரொரான்டோ நகரில் காலமானார். பிரபல சட்டத் தரணியான இவர் தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினரும் ஆவார்.

## உணவுத் தட்டுப்பாட்டை நீக்க மேலும் சில கப்பல்கள் வரும்

பருத்தித்துறை துறைமுக கடற்பரப்பு கொந்தளிப்பின்றி அமைதியாகவுள்ளதனால் உணவுப் பொருள்களுடன் மேலும் சில கப்பல்களை உடனடியாக இங்கு அனுப்பிவைக்க கொழும்பில் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

...04 ஆம் பக்கம் பார்க்க

# பேராதனை கலை முதல் தேர்வில் 210 யாழ் மாணவர்கள் சித்தி

கடந்த வருடம் ஏப்ரல் மாதம் நடைபெற்ற 1989ஆம் வருட அனுமதி மாணவருக்கான பேராதனைப் பல்கலைக் கழக வெளிவாரி கலை முதற் தேர்வு பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன.

இப் பெறுபேறுகளின் அடிப் படையில் யாழ் மாவட்டத்தி லிருந்து பரீட்சைக்குத் தோற் றிய 250 மாணவர்களுள் 210 பேர் சித்தியடைந்துள்ளனர். (23)

# யாழ் பல்கலைக்கழகக் கலைப்பீட விசேட பட்டப்படிப்புப் பெறுபேறு

(நேற்றையதொடர்ச்சி)

தமிழ்:-
செல்வி கே. அரசகுமாரி, செல்வி ஜி.ஜெகதீஸ்வரி, செல்வி எஸ். ஜெகதீஸ்வரி, செல்வி கே.சந்திரகுமாரி, செல்வி என்.ஜெயலக்சுமி, செல்வி ஆர். பூங்கொடி, எம்.பிறேம்ராஜ் ரவிச்சந்திரன், செல்வி எஸ்.ரவிச்சந்திரிகா, ஏ.ரவீந்திரன், செல்வி ரி.சிவநாயகி, செல்வி ரி. சுசிலேகா, செல்வி எம்.வசந்தமாலா.

சரித்திரம்:-
செல்வி அருள் கிறிஸ்ரெலா ரஜனி, செல்வி ஜி. மேரி திரேசா.

இந்துநாகரிகம்:-
செல்வி கே. கேதீஸ்வரி, செல்வி ஏ.மேகலா, செல்வி எஸ். சுதாமதி, செல்வி ரி. சைலஜா, செல்வி கே.விஜயகுமாரி.

புவியியல்:-
செல்வி கே. அன்பழகி, செல்வி ஆர்.லோராணி ஜஷ்யந்தி, செல்வி ஆர்.காஞ்சனா, செல்வி எஸ்.காந்தமாலா, செல்வி எஸ்.லதா, செல்வி ஆர். பிரிந்தினி, செல்வி எம் புவனேஸ்வரி, எஸ். ரமணிகரன், செல்வி பி சாந்தினி, செல்வி என். வனஜா, செல்வி எஸ்.வான்மதி, செல்வி பி.யாழினி. (ப-11)

# வளைகுடாப்போரில் அரசு இரட்டைவேடம்

## பாராளுமன்றக் குழுக்கூட்டத்தில் எதிர்க்கட்சி குற்றச்சாட்டு

ஸ்ரீலங்கா அரசு வளைகுடாப்போரில் சமாதான முயற்சி மேற்கொள்வதாக வெளியுலகுக்குக் காட்டிக்கொள்கின்றபோதிலும் உண்மையில் அது அமெரிக்கா சார்பாகவே செயற்படுகின்றது என்று கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

பாராளுமன்ற செயல்முறையும், விதிமுறையும் சம்பந்தப்பட்ட பொது நலவாயக் கருத்தரங்கின் குழுக்கூட்டத்திலேயே இக்கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

'பொதுசனத் தொடர்பு சாதனங்களுடன் பாராளுமன்ற உறவு' என்ற தலைப்பில் இக்கூட்டத்தில் உரைகளும் இடம்பெற்றன.

தகவல் ராஜாங்க அமைச்சர் ஏ.ஜே. ரணசிங்க 'பேசுகையில் 'பத்திரிகை மற்றும் பொதுசனத் தொடர்புச் சாதனங்களுக்கு இலங்கையில் சுதந்திரம் உள்ளது' என்றார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எம்பிக்களான நிமல் சிறிபால டிசில்வா, வி.வி. குணரத்ன ஆகியோர் இதனை ஏற்க மறுத்தனர்.

குணரத்ன பேசுகையில், வளைகுடா யுத்தத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் செய்திகளை வெளியிடக்கூடாதென தகவல் தொடர்பு சாதனங்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக அறிந்தேன். அமெரிக்காவுக்கு எதிரான போராட்டம் பல உலக நாடுகளில் இடம்பெறும் போது இலங்கையில் அதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

யுத்தத்தில் சம்பந்தப்பட்ட நாடுகளில்கூட யுத்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடக்கிறது. ஆனால் இலங்கையில் அது தடுக்கப்படுகிறது என்றார்.

# ஹெலித் தாக்குதலில் யுவதி படுகாயம்

கடந்த திங்கட்கிழமை மாலை ஆனையிறவை நோக்கிச் சென்ற ஹெலிக்கப்டர் ஒன்று மிருசுவிலில் அரைமணி நேரம் மூர்க்கத்தனமான தாக்குதலைமேற்கொண்டது.

இத்தாக்குதலின் போது ரேசர் குண்டுத்தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது. இதனால் வைக்கல்குவியல்கள் தீப்பற்றி எரிந்தன.

ஹெலியிலிருந்துமேற்கொள்ளப்பட்ட தாக்குலினால் மிருசுவில்-பளைய வாய்க்காலைச் சேர்ந்த சகாயராணி செல்வரட்ணம் என்ற யுவதி காவில் படுகாயமுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அன்ரிரவுசுமார் ஒன்பது மணி சாவகச்சேரி நகரில் சாளி மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த ஒருவர் மீதும் ஹெலியிலிருந்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

தென்மராட்சிப் பகுதியில் தினமும் ஹெலித்தாக்குதல்கள் பரவலாக இடம்பெற்று வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# முள்ளுக்கம்பிக்குள் முடங்குபவர் 'மூடு'ம் அடிக்கடி மாறுகிறதாம்

கிளிநொச்சியில் இயங்கும் விவசாய பீடப் பண்ணைக் காணிகளைச் சுற்றி வேலி அமைப்பதற்கு 'முள்ளுக் கம்பிகளை' கொழும்பிலிருந்து எடுத்து வருவதற்கு இராணுவத்தினர் அனுமதி மறுத்துவிட்டதாக பல்கலைக் கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனால் விவசாய பீடத்தினால் மேற்கொள்ளப்படும் பல வேலைத் திட்டங்கள் பாதிப்படைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சிலவேளைகளில் இவர்கள் இத்தகைய பொருட்களைக் கொண்டுவர அனுமதிப்பதாகவும், சிலவேளைகளில் மனம் மாறித் தடுப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. (70)


## வெளிநிலை விரிவுரைகள்

கல்வியாண்டு 1991/92

இலங்கைப் பல்கலைக்கழகங்களின் பட்டப்பாட நெறிகளான

- ★ கலை மாணி B. A
- ★ விஞ்ஞான மாணி B. Sc (புள்ளிவிபரவியல்)
- ★ வணிக மாணி B. Com

க. பொ. த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.

விபரத்தினையும் விண்ணப்பப்படிவத்தினையும் ரூபா 10/- செலுத்தி நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.

உதவிப்பதிவாளர்

பட்டப்படிப்புகள் கல்லூரி

148/1 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

0 1207



## 1ஆம் ஆண்டு சிராத்த தினம்



சிவஸ்ரீ ந. சோமாஸ்கந்தக்குருக்கள்

சுழிபுரம்

சிவஸ்ரீ சோ. நடராஜக்குருக்கள் தம்பதிகளின் புதல்வன் சிவஸ்ரீ சோமாஸ்கந்தக் குருக்களின் முதலாம் ஆண்டு சிராத்தம் இன்று (31-01-91)தை மாதம் 18ஆம் திகதி வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறுகிறது.

மனைவி, மக்கள், மருமக்கள்.

தகவல்:
சி. தியாகராஜக் குருக்கள்,
மருமகன்.

01200



## சிறு விளம்பரம்

**பயிற்சி**

(1) Diploma in Computer Programming Basic Languageபயிற்சி (2)Diploma in Pharmasit பயிற்சி ஆகியன மீண்டும் ஆரம்பமாகின்றன. ஆர்வமுள்ள அனைவரும் சேரலாம். சேர விரும்புவோர் 2-2-1991 முன்பாக நேரில் வரவும் Jaffna Central Academy (Govt. Regd) உரும்பிராய் சந்தி, (நகை மாளிகை அருகாமை) உரும்பிராய். 01198

**சேவை**

நல்லூரில் தரமான போட்டோஸ்ரட் பிரதிகளுக்கும், கறுப்பு, வெள்ளைப் புகைப்படங்களுக்கும் நாடவேண்டிய ஸ்தாபனம் "சித்திராலயா", இல 351, கோவில் வீதி, நல்லூர். (நல்லூர் கோவில் பின்வீதியில், கம்பன்கோட்டம் முன்பாக). 01201

**விற்பனைக்கு**

அளவெட்டி மேற்குக் கிராமிய உற்பத்திக் குழுவினரால் சிறந்த இலைக்கத்தரி, தக்காளி, மிளகாய், கறிமிளகாய், கோவா, பூக்கோவா, இலைக்கோவா மற்றும் சில விதை வகைகளும் மலிவான விலையில் விற்பனை செய்யப்படுகிறது. தொடர்பு: மூர்த்தி, குமணன் வீதி, அளவெட்டி தெற்கு. (எரிந்த பேக்கரி முன்பாக). 01208

**விற்பனைக்கு**

அஷ்டலக்ஷ்மி மாதக் கலண்டர் பிரதான கருமங்களை உள்ளடக்கி வெளிவந்து விட்டது. விலை ரூபா 20/- வியாபாரிகளுக்கு 15% கழிவுண்டு. நேரில் வருக. அஷ்டலக்ஷ்மி வெளியீட்டகம், கைதடி. 01212



## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி யாழ்ப்பாணம்

A/L 92 இந்து நாகரிகம்
இந்திய வரலாறு (History)
2ஆவது பிரிவு ஆரம்பம்: 03-02-91

A/L 90 வினா - விடை வகுப்பு
ஆரம்பம்: 06-02-91 10மணி

A/L 91 Day Classes
ஆரம்பமாகி நடைபெறுகின்றன

ஆசிரியர் - திருமதி S. அருள்நங்கை

21001



## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம்சந்தி - யாழ்ப்பாணம்

A/L 90, 91, 92

கிறீஸ்தவம்: அருட் - சகோதரர்

ஆரம்பம்:- 03-02-1991 (12மணி)

01209



## பாரதி கல்வி நிலையம்

சித்தன்கேணி

G. C. E. O/L

ஆண்டு 10, 9, 8, 7, 6

ஆரம்பம்: 02-02-1991 (சனி) 7.00 மணி

பிரபல ஆசிரியர் குழு:
விஞ்ஞானம் — திரு. J. R. சூரி
கணிதம் — திரு. நவராஜா
தமிழ் — திரு. பண்டிதர்
சமூகக்கல்வி — திரு. சண்
ஆங்கிலம் — திரு. செல்வரட்ணம்
வர்த்தகமும், கணக்கியலும் — திரு சுகுணன்

O/L PAPER CLASS நடைபெறுகின்றன.

## SPOKEN ENGLISH

With GRAMMAR

By Mr. BRITTO

புதிய 2ஆம் பிரிவு

ஆரம்பம்: 02-02-1991 சனி 4.30

01211

# வடக்குக் கடலில் பயணம் செய்தோரில்

## 254பேர் மர்மமறைவு; 50படகுகளையும் காணவில்லை

கடந்த ஜூன் மாதம் இராணுவ நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பமானதற்குப் பின்னர் இதுவரை வடக்குக் கடற் பகுதியில் பிரயாணம் செய்தவர்களில் 254 பேர் காணாமற் போயுள்ளதாக புகார் செய்யப்பட்டுள்ளது.

இவர்களில் பெரும்பாலானோர் இராணுவ நடவடிக்கைகளுக்கு அஞ்சி அல்லது பாதிக்கப்பட்டு அகதிகளாக இந்தியாவுக்குப் படகுகளில் சென்று கொண்டிருந்த பொது மக்களாவர்.

எஞ்சியோர் வியாபார நோக்கமாகவும், கடற்றொழிலுக்காகவும் படகுகளில் சென்றவர்களாவர்.

இவர்கள் பயணம் செய்த சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்ட படகுகளுக்கும் என்ன நடந்ததென இதுவரை அறியப்படவில்லை.

யாழ் செஞ்சிலுவைச் சங்கத்தினால் வழங்கப்பட்டுவரும் 'தேடுதல் சேவை விசாரணைப் படிவம்' மூலம் இந்தக் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவர்களில் அனேகமானோர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டிருக்கலாமெனவும், எஞ்சியோர் கடலில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கலாமெனவும் நம்பப்படுகிறது. (ப-11)

## மனிதனுக்கு இரையாக வேண்டியவை மண்ணுக்கு இரையாகின

அமெரிக்க - ஈராக் போரினால் உலக நாடுகளின் பொருளாதாரம் எவ்வாறு சீர்குலைந்து போகுமென்பதற்கு ஓர் உதாரணம் இதோ-

அவுஸ்திரேலியா சவூதி அரேபியாவுக்கு ஆட்டு இறைச்சி ஏற்றுமதி செய்வதில் முன்னணித்தேசம் - இப்போது வழியேதுமில்லாமல் நின்று விட்டது.

அங்கே மோரிஸ் என்ற ஓர் ஆட்டுப்பண்ணைக்காரர் தன்னுடைய 2500 ஆடுகளை பராமரிக்க முடியாமல் துப்பாக்கியால் சுட்டுக்கொன்று பெரிய புதைகுழியில் சமாதிகட்டிவிட்டார்.

## பௌர்ணமியில் 'யாழ் ஓசை'

'யாழ் ஓசை' இசைமன்றம் ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் இலவச இசை நிகழ்ச்சிகளை நடாத்தவுள்ளதாக மேற்படி மன்ற இயக்குனர் மா. கண்ணன் அறிவித்துள்ளார்.

இந்த வகையிலான இசை நிகழ்ச்சியொன்று கடந்த பௌர்ணமி தினத்தன்று 'யாழ் ஓசை' இசைமன்றத்தினால் நல்லூர் மனோன்மணி அம்மன் ஆலயத்தில் நடாத்தப்பட்டது.

## மன்னாரில் திருநிலைப்படுத்தல் சடங்கு

மன்னார் மறை மாவட்டத்தைச் சேர்ந்த அருட்சகோதரன் செ. றெஜினோல்ட் குருவாகவும், அருட்சகோதரர்கள் செ. ஸ்ரீபன்ராஸ், அ. விக்ரர் சொய்சா ஆகியோர் திருத்தொண்டர்களாகவும் எதிர்வரும் 6 ஆம் திகதி மடுத் திருப்பதியில் மன்னார் மறை மாவட்ட ஆயர் பேரருட் திரு. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையால் திரு நிலைப் படுத்தப்படவுள்ளார்கள். இவர்கள் கொழும்புத்துறை புனித சவேரியார்குருத்துவக் கல்லூரியில் இறையியல் கல்வி பயின்றார்கள். (71)

## தபாற்பகுதியில் பல மாற்றங்கள்

### யாழ். அத்தியட்சகராக சடாட்சரநாதன்

வட மாகாண தபால் அத்தியட்சகராகவிருந்த எஸ். எம் சேதுகாவலர் கட்டுப்பாட்டாளராக பதவி உயர்வு பெற்ற தையடுத்து கொழும்பு தபால் திணைக்களத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

யாழ் மாவட்ட தபால் அத்தியட்சகர் கே. கனகசுந்தரம் பதவி உயர்வுபெற்று கொழும்பு தபால் திணைக்களத்துக்கு இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

யாழ்மாவட்ட தபால் அத்தியட்சகராக மன்னார் மாவட்ட தபால் அத்தியட்சகர் எஸ். சடாட்சரநாதன் இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் மாவட்ட தபால் அத்தியட்சகராக மட்டக்களப்பு பிரதம தபாலதிபராக கடமையாற்றிய கே. துரைச்சாமி பதவி உயர்வுடன் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

யாழ் மாவட்ட தபால் அத்தியட்சகர் பகுதியில் நுண்ணாய்வு பரிசோதகராகக் கடமையாற்றிய எஸ். ஏரம்பமூர்த்தி பதவி உயர்வுபெற்று திருகோணமலை மாவட்ட தபால் அத்தியட்சகராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் பிரதம தபாலகத்தின் பிரதம தபாலதிபராக மன்னார் தபாலக அதிபர் கே. இராஜேந்திரம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் இவர் வடமராட்சியைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ் தபாலக பிரதித் தபாலதிபராக எம். திலகநாதனும் நியமிக்கப்பட்டுள்ளார். (33)

## முதலாம் தவணை பெப். 6இல் ஆரம்பம்

### இனிச் சனிக்கிழமைகளில் விடுமுறை

யாழ் மாவட்டப் பாடசாலைகளில் 1991 ஆம் வருடத்திற்கான முதலாம் தவணை பெப்ரவரி மாதம் 6ஆம் திகதி ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய கல்வியாண்டில் சனி, ஞாயிறுகிழமைகள் வழமை போன்று விடுமுறை நாட்களாக இருக்கும் எனினும் இழந்த பாடசாலைநாட்களை ஈடுசெய்ய விரும்பும் அதிபர்கள் கல்வித் திணைக்கள முன் அனுமதியுடன் சனிக்கிழமைகளில் பாடசாலைகளை நடாத்த முடியும்.

இது தொடர்பாக சகல கோட்டங்களுக்கும் யாழ் மாவட்ட கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கத்தினால் சுற்றுநிருபமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இச்சுற்று நிருபத்தில் பெப்ரவரி 3,4,5ஆம் திகதிகள் பாடசாலை விடுமுறை தினங்களாக இருக்குமெனவும், யாழ்மாவட்டத் தேசிய பாடசாலைகளிற்கு ஆண்டு 6 இற்கான அனுமதிப் போட்டிப் பரீட்சை 9ஆம் திகதி நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏனைய பாடசாலைகளிலும் ஆறாம்ஆண்டு அனுமதிப் பரீட்சை மூலமே இடம்பெற வேண்டுமெனவும், தமிழிலும் கணிதத்திலும் இதற்கான பொதுப்பரீட்சை ஒன்று ஏககாலத்தில் நடாத்தப்படுமெனவும் அப்பரீட்சைப்புள்ளிகளின் அடிப்படையிலேயே அனுமதி வழங்கப்படல் வேண்டுமெனவும் இச்சுற்று நிருபத்தில் மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-11)

## வளைகுடாப் போர்: இலங்கையர் பலர் காயங்களுடன் வந்து சேர்கிறார்கள்

மத்திய கிழக்கிலிருந்து இப்போது காயமடைந்த இலங்கையர் பலர் கட்டுநாயகா விமான நிலையம் வந்து சேர்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்விதம் காயமடைந்து வருபவர்களுக்கு விமானநிலையத்தில் முதல் வைத்திய சிகிச்சையளிக்கப்படும்.

அதைத் தொடர்ந்து கொழும்புப் பெரியாஸ்பத்திரி அங்கொடை வைத்தியசாலை ஆகியவற்றில் தனியான வார்டுகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

தற்போது வளைகுடாவில் நடைபெறும் யுத்தத்தில் பல இரசாயன ஆயுதங்கள் பாவிக்கப்படுவதால் இதில் காயமடைந்து நாடு திரும்பும் இலங்கையர்களுக்கு வைத்திய சிகிச்சை அளிக்கும் நோக்கத்துடன் விசேட சிகிச்சைப் பிரிவு விமான நிலையத்தில் திறக்கப்பட்டுள்ளது.

## கடவுள் கொடுத்தவை இருகால்கள் கடவுளுக்காக இவர் நிற்கிறார் ஒருகாலில்!

இந்தியாவின் ஓர் ஆசாமி கடந்த ஐந்தாண்டுகளாக ஒற்றைக்காலிலேயே தவம் இருந்து வருகிறார்.

எதற்கென்று அறிந்தால் ஆத்திரம்வரும் - அயோத்தியில் பாபர் பள்ளியை உடைத்துவிட்டு ராமர் கோயில் கட்ட!

இதற்கு முன் இன்னொருவர் இருபது வருடங்கள் ஒற்றைக்காலில் நின்றுவிட்டு தற்போது மரியாதையாக இரண்டுகாலில் நிற்கத்தொடங்கினாராம்.

ஒவ்வோர் உயிரினத்திலும் ஓர் உயிர் கொம்ப்யூற்றர் அடிப்படையாக அமைந்திருக்கிறது. பிறப்பு முதல் இறப்பு வரையிலான உயிரியல் அமைப்புக்களின் வரைமுறைகள் அனைத்தும் அதில் முன்கூட்டியே பதிந்து வைக்கப்பட்டுள்ளன என்று உயிரியல் விஞ்ஞானி பியோதர் கர்யயேவ் கருதுகிறார்.

## நமக்குள் ஓர் உயிர் கொம்ப்யூட்டர்

உயிரியல் விஞ்ஞானிகளும், மரபியல் விஞ்ஞானிகளும் பல்லாண்டு காலமாக மூளையைப் போட்டுக் குடைந்து கொண்டிருக்கும் ஒரு விஷயத்துக்கு விடை காண்பதற்குப் பியோதர் உருவாக்கியுள்ள விஞ்ஞானக் கொள்கை உதவிகரமாக இருக்கும் என்று நம்பப்படுகிறது.

புகழ்பெற்ற சோவியத் உயிரியல் அறிஞரான அலெக்சாந்தர் குர்விச் தமது இருபதாம் வயதுகளிலேயே உயிர்ப்பொருள்களின் செல்களுக்கிடையிலான செய்திப் பரிவர்த்தனையானது பொருள் ரீதியாக மட்டுமல்லாமல் காந்தப் புல ரீதியாகவும் நடைபெறுகிறது என்று கண்டறிந்து கூறியிருந்தார்.

இந்தக் காந்தப் புலமே எதிர்கால உயிர்ப் பொருள்களின் அமைப்பைத் தீர்மானிக்கிறது ஆனால் இது எவ்வாறு நிகழ்கிறது என்பதை அப்போது விளக்கமாகக் கூற முடியவில்லை. வருந்தத்தக்க வகையில் அப்போது அவரது கருத்துக்கு அங்கீகாரம் கிடைக்கவில்லை. கடந்த ஐம்பதாண்டுக் காலத்தில் அவர் கூறிய கருத்தே பலராலும் மறக்கப்பட்டு விட்டது.

அறிவுக் கூர்மைவாய்ந்த அவரது யூகத்தின் அடிப்படையில் ஆராய்ந்ததன் பயனாகக் கடைசியில் இப்போது அடுத்த அடி எடுத்து வைக்க முடிந்திருக்கிறது. நமக்குள்ளேயே ஓர் உயிர் முப்பரிமாணக் கொம்பியூற்றர் இருக்கிறது என்ற கருத்துக்கு இப்போது வந்திருக்கிறார்கள்.

ஒரு தலைமுறையிடமிருந்து அடுத்த தலைமுறைக்கு விசேட மரபியல் நெறியின் வாயிலாக வழங்கப்பட்டு வந்து கொண்டிருக்கின்ற தனது ''உருவ அமைப்பை'' ஒவ்வொரு உயிரினப் பிரிவும், தனித்தனி உயிர் ஒவ்வொன்றும் தன்னகத்தே கொண்டிருக்கிறது அதாவது. செல்களின் உட்கருக்களில் முக்கிய பங்கு வகிக்கும் குரோமோசோம்களுக்கு, எதிர்கால உயிரினத்தின் அமைப்பு எப்படியிருக்கும் என்பதை ''நிர்ணயிக்கக்கூடிய'' ஆற்றல் இருக்கிறது என்று இதற்குப் பொருளாகும்.

—(நாளை தொடரும்)

## புனித ஜோண் போஸ்கோ

இத்தாலி தேசத்திலுள்ள பெக்கி என்ற ஊரில் பிரான்சிஸ் பொஸ்கோ, மார்கரீத் ஒக்கியேனா ஆகியோரின் இரண்டாவது மகனாக 1815ஆம் ஆண்டு ஆவணி 16ஆம் திகதி குழந்தை ஜோண் அவதரித்தார். இவருக்கு இரண்டு வயது கூட நிறையவில்லை. தந்தையை இழக்கும் துர்ப்பாக்கிய நிலை. இவரது தயார் பரம ஏழை. ''இறைவன் நம்மை எப்போதும் பார்த்துக் கொண்டிருக்கிறார்'' என்னும் சத்தியத்தை அடிக்கடி நினைவூட்டினார். தெய்வ பக்தியையும் நல்லொழுக்கத்தையும் பயிற்றுவித்தார்.

தாயின் விழிப்பான வழி நடத்தலில் வளர்ந்த இவர் அறிவு வளர்ச்சியுடன் ஆன்மீக வளர்ச்சியும்பெற்று அனைவரினதும் அன்புக்குப் பாத்திரராயினார். இவர் தனது ஒன்பதாவது வயதிலேயே பாடசாலை சென்றார். வறுமையின் பிடியில் சிக்கிய இவர் பல இன்னல்களை பாடசாலைக் காலத்தில் அனுபவித்தார். அத்தகைய நிலையிலும் படிப்பில் மகா கெட்டிக்காரர். இவருக்கு இறைவனின் அருட்கொடை நிறைய இருந்தது தனக்கு இரவலாகக் கிடைக்கும் புத்தகங்களைப் படித்துக்கொண்டே வயலில் வேலை செய்வார்.

பதினாவது வயதிலே தனது முயற்சியால் தெய்வீகத் தொண்டுகள் புரிந்தார். தனது எதிர்கால வாழ்வை இறைசித்தத்தினால் கனவுகள்மூலம் கண்டறிந்தார். இறைவனிடத்திலும் தேவதாயாரிடத்திலும் தனது நம்பிக்கையை வைத்துப்பெற்ற நுட்ப அறிவு, ஞாபகசக்தி, அபூர்வ தேகவலிமை இவற்றைக்கொண்டு பல அற்புதங்களைச் செய்தார். பல மொழிகளில் பாண்டித்தியம் பெற்று விளங்கினார்.

## இன்று ஜோண்பொஸ்கோ நினைவுதினம்

இருபத்தாறாவது வயதில் குருப்பட்டம் பெற்றார். ஏழைகளிடத்தில் அன்பு செய்த இவர், ஏழைகள், அநாதைகள், சிறைக்கூடத்திலுள்ளோர் ஆகியோரை நல்வழிப்படுத்தி நல்லதொரு சமுதாயத்தை உருவாக்கித் தனது வாழ்நாளை இவர்களுக்காக அர்ப்பணித்தார். இவருடன் சம்பாஷிக்க நேரிட்ட யூதமனிதன் ஒருவன் ''ஒவ்வோர் பட்டினத்திலும் ஒவ்வோர் பொஸ்கோ இருப்பாரேயானால் உலகம் திருந்திவிடும்'' என்று கூறினார்.

இவர் மனித குலத்தின் பரோபகாரி, 19ஆம் நூற்றாண்டின் நூதனங்களில் ஒன்றெனவும் ஓர் விடிவெள்ளி எனவும் அநாதைகளின் தந்தை, சிறுவர்களின் அன்பர் எனவும் மக்களால் அன்புடன் அழைக்கப்பட்டார். மாணவரின் தன்மையை உணர்ந்து ஆசிரியர்களை வகுப்பில் முதலில் நுழைந்து இறுதியில் வெளியேற வேண்டும் எனவும் மாணவர்கள் தண்டிக்கப்படாது தடுக்கும் முறையில் வழிநடத்தப்பட வேண்டும் எனவும் அறிவுரை கூறியுள்ளார்.

உலகின் ஒளியாக இருந்த இப்புனிதர் 1888ஆம் ஆண்டு தைமாதம் 31ஆம் திகதி இவ்வுலக வாழ்வை நீத்தார். இவரின் பெயரால் அழைக்கப்படும் பாடசாலைகள் பல உலகெங்கும் உள்ளன. இன்றைய தினம் இப்பாடசாலைகள் அனைத்தும் ஞாபகார்த்த விழாக்களை எடுத்து இவருக்கு நன்றி செலுத்துகின்றன. நாமும் இளஞ்சிறார்களின் நல்வாழ்வுக்காகவும் ஆன்மீக ஈடேற்றத்துக்காகவும் அயராது பாடுபட்டுத் தனது உயிரைத் தியாகஞ் செய்த புனிதர் ''ஜோண் பொஸ்கோ'' அவர்களை நன்றியுடன் நினைவு கூருவோம்.

— மேரி

பொஸ்கோ வித்தியாலயம்

# நச்சு ஆயுதங்களை உபயோகிப்பது எப்படியென ஈராக் கிளர்ச்சி ஆதரவாளர்கட்குப் பயிற்சியளிக்கப்படுகிறது

கிழக்கு ஐரோப்பிய நாடுகளான செக்கோஸ்லவக்கியா, ஹங்கேரி, கிழக்கு ஜேர்மனி ஆகியவற்றில் ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைனின் ஆதரவு தீவிரவாதிகள் தற்போது நச்சாயுதப் பயிற்சி பெற்று வருவதாகத் தெரியவந்துள்ளது. நேற்றிரவு பிரிட்டனில் "சனல்-4" எனப்படும் தொலைக் காட்சி நிகழ்ச்சியில் இது குறித்த செய்திகள் வெளியிடப்பட்டிருந்தன. முன்னாள் கிழக்கு ஜேர்மன் இரகசியப் பொலிஸ் அதிகாரி ஒருவரே இத்தகவலை வெளியிட்டுள்ளாராம்.

இவரது தகவலின்படி, ஈராக்கியரும், பலஸ்தீனியரும் 1985 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பேர்லின் அருகே தீவிரவாதப் பயிற்சிகளைப் பெற்றிருக்கின்றனர். இரசாயன மற்றும் உயிரியல் ஆயுதங்களை எவ்வாறு கையாள்வது, எவ்வாறு இலகுவான இலக்குகளில் (soft Targets) இவற்றைப் பிரயோகிப்பது என்பது குறித்துப் பயிற்சிகள் அளிக்கப்பட்டிருக்கின்றன.

தற்போதைய வளைகுடாப் போரின் எதிரொலியாக ஹுசைனின் வேண்டுகோளின்படி இத் தீவிரவாதிகள் ஐரோப்பா மற்றும் வட அமெரிக்கப் பகுதிகளைத் தமது இலக்குகளாகத் தெரிந்தெடுக்கலாம் என அஞ்சப்படுகிறது. ஆறுகள், நீர் தேக்கங்கள் என்பவற்றை நச்சூட்டல், மஞ்சள்காய்ச்சற்கிருமிகளைச் சூழலில் பரவ விடுதல் என்பவற்றை இவர்கள் மேற்கொள்ளலாம்.

வொலிஞ்சல்ஸிரைம்ஸ் என்ற பத்திரிகையின் தகவலின்படி 49 ஈராக்கிய அதிகாரிகளும் இது குறித்து ராணுவப் பயிற்சியைச் செக்கோஸ்லவக்கியாவில் பெறுகின்றனராம்.

### சவுதியினுள் ஈராக் படையினர் ஊடுருவல்

ஈராக்கிய துருப்புகள் சவுதி அரேபியாவினுள் கடும் தாக்குதலை நடாத்தியவாறு ஊடுருவியுள்ளன. எல்லையில் இருந்து இருபது கிலோ மீற்றர் தொலைவிலுள்ள அல் ஹஜ்ஜி எனும் நகர்வரை சென்ற துருப்புகள் அமெரிக்க நேச அணிகளுக்கு பலத்த சேதத்தை விளைவித்துவிட்டுத் திரும்பி வந்து விட்டதாக ஈராக் அறிவித்தது.

### துருக்கி அருகே ஈராக் ஏவுகணை

துருக்கியுடனான தனது எல்லையில் ஈராக் ஏவுகணைகளை நிறுத்தியுள்ளது. இது துருக்கி மீதும் ஈராக் தாக்குதலை நடாத்த வழிவகுக்கலாம் எனக் கூறப்படுகிறது. இதேசமயம் துருக்கியிலுள்ள அமெரிக்க பிரிட்டன் விமான சேவை அலுவலகங்களில் பெரும் குண்டு வெடிப்புக்கள் நிகழ்ந்தன: உயிர்ச் சேதம் ஏற்படவில்லை.

### தரையில் முதல் முறையாகப் போர்

வளைகுடாப்போரில் முதன் முறையாகத் தரைப்போர் நேற்று சிறியளவில் ஆரம்பித்துள்ளது. சவுதி-குவைத் எல்லையின் மூன்று பகுதியில் ஈராக் டாங்கிப் படையும், [illegible] மோதிக்கொண்டன. மோதலில் ஐம்பது ஈராக் டாங்கிகள் ஈடுபட்டதாகக்கூறப்படுகிறது.

# பல்கலைக்கழக மாணவருக்கு 15 லட்சம் ரூபா வந்தது

யாழ் பல்கலைக்கழக மாணவர்களுக்கு மாகாபொல உதவிப் பணம், மற்றும் ஏனைய செலவுகளுக்கான 15 லட்சம் ரூபா பணம் இலங்கை வங்கியால் வழங்கப்பட்டுள்ளது.

இம்முறை யாழ் பல்கலைக்கழக மாணவர்களுக்கான பணக்கொடுப்பனவுகள் முழுவதும் பணமாக வழங்கப்படுமென பல்கலைக்கழகப் பதிவாளர் தெரிவித்தார்.

இது வழங்குவது தொடர்பான திகதிகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ப 11)

# மனநோயாளிகளுக்குரிய உணவு இடைநிறுத்தப்பட்டது

தெல்லிப்பழை அரசினர் ஆஸ்பத்திரி மனநோயாளிகளுக்கு கடந்த இரு தினங்களாக துர்க்காதேவி ஆலய நிர்வாகத்தினர் உணவு வழங்கியுள்ளனர்.

இவர்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் உணவு விநியோகம் நடைபெற்றதாகவும், அதன் கொடுப்பனவுகளை ஆஸ்பத்திரி நிர்வாகம் வழங்காததால் அது இடைநிறுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ப-10, 48)

### அமைச்சர்...

சர் தொண்டமான், ஜனாதிபதி பிரேமதாஸ ஆகியோர் நடாத்திய விருந்துபசாரங்கள் என பட்டியல் நீண்டு வருகிறது. சுக்ளா தமது அநேகமான உரைகளை இவ் விருந்துபசாரங்களில் கலந்து கொண்டே உரையாற்றிவருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### யுத்த நிறுத்த...

இனப்பிரச்சினைக்குராணுவத் தீர்வை விடுத்து அரசியல் தீர்வைக் காணுமாறு அமைச்சர் சுக்ளா வலியுறுத்தியதாகவும் யுத்தநிறுத்தம் கைவிடப்பட்டமை இந்தியாவிற்கு ஏமாற்றம் தந்ததாக இலங்கையரசுக்கு எடுத்துக் கூறப்பட்டது எனவும் தெரிவித்தார்

அமைச்சர் சுக்ளாவை ஐந்து தமிழ் தீவிரவாதக் குழுக்கள் உட்பட ஏழு தமிழ் அரசியற் கட்சிகள் நேற்றுக்காலை சந்தித்ததாகக் கூறப்படுகிறது.

## காரைநகரில் சைவசமயப் பரீட்சை

காரைநகர் மணிவாசகர் சபையினரால் ஆண்டு தோறும் நடாத்தப்படும் சைவசமயப் பரீட்சை எதிர்வரும் 3 ஆம் திகதி காலை 8 மணிக்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

காரைநகர் கொத்தணிப் பாடசாலை அதிபர்களுக்கு, மாணவர்களின் அனுமதிப் பத்திரங்கள் அனுப்பிவைக்கப் பட்டுள்ளது என்று மணிவாசகர் சபையின் பரீட்சைச் செயலாளர் க. தில்லையம்பலம் அறிவித்துள்ளார்.

### வவுனியாவில்—

விலைகளில் பெரும் வீழ்ச்சி ஏற்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (ப 35, 38)

### மணலாற்றில்...

டன் மோதலில் ஈடுபட்டனர்

மோதல்கள் அரைமணி நேரம் தொடர்ந்தன. புலிகளின் கடும் எதிர்ப்பைச் சமாளிக்கமுடியாது படையினர் முந்திரிகைக்குளம் முகாமிற்குப் பின்வாங்கிச் சென்றனர்.

இதேசமயம் புலிகள் மீது அதிரடித்தாக்குதல் நடாத்த ஆறு விசைப்படகுகளில் படையினர் கொக்குத்தொடுவாய் நோக்கி வந்தனர். இவர்களைக் கொக்கிளாய் களப்பில் இடைமறித்த புலிகள் மற்றுமோர் தாக்குதலை ஆரம்பித்தனர். இத்தாக்குதலில் ஒரு விசைப்படகு சேதமடைந்தது. இதைத் தொடர்ந்து மற்றைய ஐந்து படகுகளும் பின்வாங்கிவிட்டன,

நேற்று முன்தினம் நடந்த இத்தாக்குதல்களில் இராணுவத்திடம் இருந்து ரி-56-I-3, ரவைக்கூடு- 12' ரி-81-1, ரவைகூடு-3, ரவைகள் -279, வானொலி தொலைத் தொடர்புக் கருவி, மின்கலங்கள்-2, ஜே. ஆர் குண்டு-2 என்பன புலிகளால் மீட்கப்பட்டன.

இம்மோதல்களில் புலிகள் தரப்பில் 2ஆம் லெப் முரளி (பாலசுப்பிரமணியம் செல்வகுமார்) திருமலை, சபேசன் (முகுந்தன்) தொண்டமானாறு ஆகிய இரு போராளிகள் வீரமரணமடைந்தனர்,

இச்சம்பவங்களையடுத்து நேற்று மாலை 5.30 மணிக்கு கொக்கிளாய் கொக்குத் தொடுவாய்ப் பகுதிகள் மீது பலத்த வான் தாக்குதல்கள் நடந்தன.

பொம்மர்கள், ஹெலிகள் வேவு விமானங்கள் தாக்குதலில் ஈடுபட்டன. இதனால் கொக்குத்தொடுவாயில் பாடசாலை ஒன்று முற்றாகவே சேதமடைந்தது. (71)

டிசம்பர், ஜனவரி மாதங்களுக்குரிய

# ரயில்வே பென்சன் வவுச்சர்கள் செயலகத்திற்கு வந்துள்ளன

டிசம்பர், ஜனவரி மாதங்களுக்குரிய ரயில்வே பென்சன் வவுச்சர்கள் யாழ் செயலகத்திற்கு வந்துள்ளன.

இவற்றை இன்றும் நாளையும் செயலகத்தில் வைத்து உரியவர்களிடம் நேரடியாகக் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நேரடியாகப் பெற்றுக் கொள்ளத்தவறும் வவுச்சர்கள் தபாலில் உரிய விலாசதாரர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

இப்பென்சன் வவுச்சர்களுக்குரிய காசோலைகளும் அந்தந்த வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (66)

# பருத்தித்துறை துறைமுகத்தில் திருத்த வேலைகள் ஆரம்பம்

பருத்தித்துறை துறைமுக திருத்த வேலைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

துறைமுகத் திருத்த வேலைகள் முடிவடைந்ததும் கப்பலிலிருந்து பொருள்களை இறக்கும் வேலைகள் துரிதமாக மேற்கொள்ள முடியுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

கப்பல்கள் மூலம் மேலும் பொருள்களை விரைவாக வட பகுதிக்குக் கொண்டுவரத் தேவையான நடவடிக்கைகளைத் தான் மேற் கொண்டு வருவதாக அரசாங்க அதிபர் தெரிவித்தார். (66)

# ஓட்டுத்தொழிற்சாலை ஊழியரை தெற்கே இடமாற்ற ந[illegible]

ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை உத்தியோகத்தர்களை தென் பகுதிக்கு இடமாற்ற கொழும்பில் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

மின்சாரம் இல்லாமல் பல [illegible] உற்பத்திகள் ஸ்தம்பித்துள்ளதையடுத்து [illegible] பகுதிகளிலுள்ள ஓட்டுத் தொழிற்சாலைகளுக்கு இடமாற்றம் செய்யத் தலைமைப் பீடம் ஆலோசித்து வருவதாகத் [illegible] வட்டாரங்கள் தெரிவித்தன. (38)

# கிளிநொச்சித்தபால் பொதிகள் வவுனியாவில் தவம்கிடக்கின்றன

கிளிநொச்சி மாவட்டத்துக்குரிய வெளியூர்த்தபால் பொதிகள் கடந்த இரண்டு மாதத்துக்கு மேலாக கிளிநொச்சிப் பகுதிக்குவரவில்லை யென்றும் இத்தபால் பொதிகள் வவுனியாவில் தவம் கிடப்பதாகவும் தபாலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவற்றைக் கொண்டுவர இல தொண்டர் நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டும் எது வித பலனும் கிடைக்கவில்லை எனவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (38)

# யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கு மதிய உணவு முத்திரைகள்

யாழ்மாவட்டப்பாடசாலை மாணவர்களுக்கான மதிய உணவு முத்திரைகள் அவ்வப் பகுதி உதவி அரசாங்க அதிபர்கள் மூலமாகப் பாடசாலைகளுக்கு வழங்கப்படும்.

லங்கா சிறி கப்பல் மூலம் கொண்டு வரப்பட்டுள்ள இரண்டு லட்சத்து 25 ஆயிரம் முத்திரைகளும் யாழ் சமூக சேவைப் பகுதி உதவிப் பணிப்பாளரினால் உதவி அரசாங்க அதிபர்களுக்குக் கையளிக்கப்படவுள்ளன.

பாடசாலை அதிபர்கள், மாணவர்கள் பற்றிய விபரங்களை அவ்வப்பகுதி உதவி அரச அதிபர்களுக்குத் தெரிவித்து இவ் உணவு முத்திரைகளைப் பெற்றுக் கொள்ளலாம் எனச் செயலக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (66)

### ஹெலி...

டர் ஒன்று தாக்குதல் மேற்கொண்டது.

இத் தாக்குதலினால் வல்லை வெளியில் உள்ள முனியப்பர் கோயில் சேதமடைந்தது.

இதேபோலப் பொன்னாலைச் சந்தியிலும் ஹெலித் தாக்குதல் இடம்பெற்றது (ப - 10)

### உணவுத்...

இக் கப்பல்களில் நிவாரண உணவுப் பொருள்களுடன் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகக் கட்டுப்பாட்டு விலையில் விற்பனை செய்வதற்கென பெருமளவு மாவு மற்றும் உணவுப் பொருட்களும் அனுப்பிவைக்கப்படவுள்ளன.

இதேவேளை தரை மார்க்கமாக லொறிகள் மூலம் உணவுப் பொருள்களை அனுப்பி வைக்க அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிய வருகிறது. (66)

### கொழும்பில்...

கூட்டு விற்பனை உத்திகள் இரு நாடுகளுக்குமே கணிசமான வருவாய் வசதிகளைத் தோற்றுவிக்கவும் என ஸ்ரீலங்கா பெருந்தோட்டத் தொழிற்றுறை, பாதுகாப்பு, இராஜாங்க அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்ன நம்பிக்கை வெளியிட்டதாகவும் இவ்வட்டாரங்கள் மேலும் கூறின.

தேயிலை வர்த்தகம் பற்றி திரு. விஜேரத்ன வுடனும் வெளியுறவு அமைச்சர் திரு. ஹரல்ட் ஹேரத்துடனும் திரு. சுக்ளா பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது.


## தேவை - அச்சுக் கடதாசி

எந்தரக அச்சுத் தாள்களாயினும், எவ்வளவு தொகையானாலும். அதிகபட்ச விலைக்குக் கொள்வனவு செய்யப்படும்

நேரில் வருக !

லக்ஷ்மி பில்டிங், கல்வியங்காடு — நிர்வாகி, முரசொலி


இப்பத்திரிகை முரசொலி பப்பிளிஷேர்ஸ் (பிறைவேட்)லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சு வீதி, 'லக்ஷ்மிபில்டிங்' கில் உள்ள அச்சகத்தில் 31-01-1991 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.